# பாலியலும் பருவ வயதும்

பாரசீக மொழி மூலம் :

அல்லாமா நாஸிர் மகாரிம் ஷீராசி

தமிழில் :

அஷ்-ஷெய்க் அப்துல் ஹலீம்

| | | |
|---|---|---|
| Name of the Book | : | Paliyalum Paruwa Wayathum<br>*(Muskilathe Jinsiye Javanan)* |
| Author | : | Allama Nazir Makarim Shirasi, Iran |
| Translated from Persian by | : | Ash-Sheikh Abdul Haleem |
| Published by | : | **Al-Kauser Society of Sri Lanka**<br>118 Keels Housing Scheme<br>Enderamulla - Wattala<br>Sri Lanka. |
| First Edition | : | August 2003 |
| No. of pages | : | VIII + 66 |
| Type-set | : | Rizvy |
| Printed by | : | Colourshine Printers, Koswatte -<br>Nawala. |

© Translator

ISBN 955-8153-04-4

Price : Rs. 100/-

# என்னுரை

தற்கால மனிதன் அறிவியல் ரீதியில் முன்னேறியுள்ள அளவு ஆன்மீக ரீதியில் முன்னேறவில்லை. மனிதர்களின் நல்வாழ்வுக்கு பௌதிக அறிவியலுடன் ஆன்மீக ரீதியான அறிவும் இவற்றிற்கிடையேயான தெளிவும் தேவை. ஒரு பறவை பறப்பதற்கு இரு இறக்கைகள் எவ்வாறு அவசியமோ, ஒரு வண்டி ஓடுவதற்கு இரு சக்கரங்கள் எவ்வாறு அவசியமோ அது போன்றே மனிதனின் நல்வாழ்வுக்கும், அவனது ஒழுக்க மேம்பாட்டுக்கும் இரு வகையான அறிவு இன்றியமையாததாகும். மனிதனின் பௌதீக வாழ்வை அறிவும், ஆற்றலும் வளமாக்குவது போல் அவனது அக வாழ்வையும், அந்தரங்கத்தையும் ஆத்மீக வாழ்வு வலுவடையச் செய்கின்றது. மனித வாழ்வின் முக்கிய காலகட்டம் அவனது இளமைப்பருவமாகும். இது சீரும் சிறப்புமாக அமைய மனிதனின் முயற்சி மிகப் பிரதானமாகும்.

*“இரு விடயங்களின் சிறப்பினை அதனை இழந்த பின்பே மனிதன் அறிவான். அவை இளமையும், தேகாரோக்கியமுமாகும்”.* அல்–ஹதீஸ்

முதியோர் இளசுகளுக்கு இளமை பற்றியும் அதன் பெறுமானம் பற்றியும் கூறும் புத்திமதிகளை பல இளைஞர்களால் புரிய முடிவதில்லை. இதனால் இப்பருவம் கடந்த பின்பே இவர்களால் தமது இளமைப் பருவம் பற்றி உணர முடிகிறது. இவ்வுணர்வு வயோதிபத்திலே ஏற்படுவதால் என்ன பயன்?

“நீர் நிலைகளில் வாழுகின்ற மீன் ‘தண்ணீர் என்றால் என்ன?’ எனக் கேட்கின்றபோது, ‘நீரிலிருந்து சற்று வெளியே வா. அப்போது நீர் என்றால் என்ன என்று அறிவாய்’ என்று முன்னும் பின்னும், மேலும் கீழுமாக நீரில் மூழ்கி வாழ்ந்து கொண்டிருக்கும் மீனுக்குக் கூறப்பட்டதாம்”. இது போல் ஓர் அருளாகவும், வரப்பிரசாதமாகவும் ஒரு தடவை மாத்திரம் கிடைக்கப்பெற்றதே இளமைப்பருவம். அதனை உரிய முறையில் பயன்படுத்தியவர்களே புத்திசாலிகளாகவும், புத்திஜீவிகளாகவும் வாழ்கின்றனர்.

'பாலியலும் பருவ வயதும்' எனும் இந்நூல் ஈரான் இஸ்லாமியக் குடியரசின் அறிவகமாம் "கும்" நகரின் அறிவின் மகுடம், இறைஞான ஜோதி ஹஸ்ரத் அல்லாமா நாஸிர் மகாரிம் ஸீராசி – எனது அறிவுத் தந்தை – அவர்களின் பாரசீக மொழியிலான ஒரு நூலாகும். இந்நூல் இதுவரை பல மொழிகளில் பெயர்க்கப்பட்டு பதினாறு தடவைக்கு மேல் மறுபிரசுரம் செய்யப்பட்டு பல்லாயிரக்கணக்கான வாலிபர்களின் பாலியல் ரீதியான பிரச்சினைக்கு வழிகாட்டி அவர்களது வாழ்வை வளமாக்கியுள்ளது.

நூலாசிரியரின் நூற்களை விற்பனை செய்து கொண்டிருக்கும் அவர்களது புத்தகக் களஞ்சியத்தில் நேரடியாக நான் இந்நூலை வாங்கி வாசித்தபோது இதைத் தமிழில் மொழிபெயர்க்க வேண்டும். அதன் மூலம் தமிழ் பேசும் இளசுகளின் இதயத்தை ஒளிபெறச் செய்ய வேண்டும் என என்னுள் தோற்றம் பெற்ற அவா இறையருளால் நிறைவேறியுள்ளது. அல்ஹம்துலில்லாஹ்.

வஸ்ஸலாம்.

1 ஒகஸ்ட் 2003

அஷ்-ஷெய்க் அப்துல் ஹலீம்

# அணிந்துரை

இளமைப் பருவம் என்பது குழந்தைப் பருவத்திற்கும் (*Childhood*) முழு வளர்ச்சிப் பருவத்திற்கும் (*Fullmanhood*) இடைப்பட்ட பருவமென அடையாளப்படுத்தப்படுகின்றது. இது உடல் வலிமையும் வீரியமும் (*physical strength and energy*) கொண்ட பருவமாகும்; வாழ்வில் சுறுசுறுப்பும் இயக்கமும் செயற்றிறனும் மிக்க பருவமாகும். வாழ்வில் தன் வாலிபத்தைப் பயன்படுத்திக் கொள்ளாதவன் வளமான வாழ்வுக்கு உரித்துடையவனாவது சாத்தியமானதன்று. இதனாலேயே முதுமை வரும்முன்னர் இளமையைப் பயன்படுத்திக் கொள்ளுமாறு நபிமொழி வழிகாட்டி நிற்கின்றது.

பருவ வயது என்பது முற்றிலும் நல்ல பருவமல்ல; கெட்ட மோசமான பருவமுமல்ல. இளமையென்பது வாளைப் போன்றது. அதனைப் போர் வீரனும் பயன்படுத்தலாம்; கொள்ளைக்காரனும் பயன்படுத்த முடியும். மனித இன வரலாற்றில் ஆக்கப் பணிகளில் முன்னின்று உழைத்த பெருமை அதிகம் இளைஞர்களையே சாரும். அதேவேளை உலகில் நாசவேலைகளுக்கும், அழிவு வேலைகளுக்கும் அவர்களே துணை நின்றதையும் காணலாம்.

ஒரு சமூகத்தின் எழுச்சியும் வீழ்ச்சியும் அதன் இளைஞர்களில் தங்கியுள்ளது என்றால் மிகையாகாது. தமது இளைஞர் பரம்பரையை சரியாகப் பயிற்றுவித்து, முறையாக நெறிப்படுத்தி, வழிப்படுத்திய ஒரு சமூகமே எழுச்சி பெற முடியும் என்பதற்கு வரலாறு சான்று பகர்கின்றது. இளைஞர்களை இழந்த சமுதாயம் தன் இருப்பை இழந்துவிடும்; இருந்த இடம் தெரியாமல் தொலைந்துவிடும். இவ்வகையில் இளமையின் முக்கியத்துவத்தை பக்குவப்படுத்தி அதன் மூலம் பயன்பெறுமாறு வலியுறுத்துகின்றது. முன்மாதிரியான ஓர் இளைஞனுக்கு உதாரணமாக அல்-குர்ஆன் நபி யூஸுபைக் குறிப்பிடுகின்றது; அவரின் ஆளுமைப் பண்புகளையும் அவர் பெற்றிருந்த திறன்களையும் தருகின்றது. அடையாளப் புருஷர்களாகக் கொள்ளத்தக்க ஓர் இளைஞர் குழுவைப் பற்றி அல்—குர்ஆனின் அல்—கஹ்ப் அத்தியாயம் விளக்குகின்றது.

*"…..நிச்சயமாக அவர்கள் சில இளைஞர்கள்; அவர்கள் தங்கள் இரட்சகனை விசுவாசித்தார்கள்; மேலும் நேர்வழியை அவர்களுக்கு நாம் அறிமுகப்படுத்தினோம். மேலும் (அக்கால அரசன் முன்னிலையில்) அவர்கள் எழுந்து நின்று 'வானங்களுக்கும், பூமிக்கும் இரட்சகன்தான் எங்கள் இரட்சகன்; அவனையன்றி வணக்கத்திற்குரிய வேறு நாயனை நாம் அழைக்க மாட்டோம்; (அவ்வாறு அழைத்தால்) அப்போது உண்மையில் நாம் வரம்பு மீறிய வார்த்தையைக் கூறிவிட்டோம்' என்று அவர்கள் உறுதியாகக் கூறியபோது, அவர்களுடைய உள்ளங்களை (நேரான வழியில்) நாம் உறுதிப்படுத்தி விட்டோம்." (18:13, 14)*

நபி (ஸல்) அவர்களின் தூதுத்துவப் பணிக்குத் தோள் கொடுத்தவர்களில் பெரும்பான்மையினர் இளைஞர்களாகவே இருந்தனர். இஸ்லாமிய வரலாற்றில் ஸ்பெயினைக் கைப்பற்றிய தாரிக் பின் ஸியாதும், இந்தியாவின் மீது படையெடுத்து வந்த முஹம்மத் பின் காஸிமும் இளம் வாலிபர்களே.

ஆனால், இன்றைய முஸ்லிம் உம்மாவைப் பொறுத்த வரையில், அதன் இளைய தலைமுறையினரின் நிலை பெரிதும் கவலைக்கிடமானதாகக் காணப்படுகின்றது. மேற்கத்தேய, சடவாத, உலகாயத கலாசாரத்தின் படையெடுப்புகளுக்கு முன்னால் எமது இளைஞர்கள் நாளாந்தம் செத்து மடிந்து கொண்டிருக்கின்றனர். சிற்றின்பங்களும், அற்ப உலகாயத அடைவுகளுமே இவர்களில் பெரும்பான்மையானோரின் இலக்குகளாக இருக்கின்றன. வாழ்வின் அர்த்தத்தைப் புரியாமல், தம் மீதுள்ள பொறுப்புக்களை உணராமல் தான்தோன்றித்தனமாக வாழும் வாலிபர்களையே எங்கும் காண முடிகின்றது. இளைஞர் சமூகத்தின் இவ்வீழ்ச்சி நிலையின் பயங்கர விளையை உலகளாவிய 'முஸ்லிம் உம்மா' இன்று அனுபவித்துக் கொண்டிருக்கின்றது.

எனவே, இன்றைய சமூக புனர்நிர்மாண, சீர்திருத்தப் பணியிலும் பிரசாரப் பணியிலும் இளைஞர் விவகாரம் முக்கியத்துவமும் முன்னுரிமையும் பெற வேண்டியது அத்தியவசியமாகும். அதிலும் இளைஞர்களின் தனிப்பட்ட ஒழுக்க வாழ்வை ஒழுங்குபடுத்துவது பிரதான இடத்தைப் பெறல் வேண்டும். இன்றைய இளைஞர்களின் இருப்பை அச்சுறுத்தும் மிகப் பெரிய பிரச்சினை ஒழுக்கச் சீர்கேடுகளே என்பதை அறியாதோர் இருக்க முடியாது. ஆயினும், நடைமுறையில் முஸ்லிம் சமூகத்தில் இளைஞர்களின் பிரச்சினைகள் உரிய இடத்தைப் பெறாமை கவலைக்குரியதாகும்.

இந்நிலையில் இளைஞர்கள் எதிர்நோக்கும் மிக முக்கியமான பிரச்சினையாகக் கருதப்படும் 'பாலியல் சீர்கேடுகள்' பற்றியும், அவற்றுக்கான சாத்தியமான தீர்வுகள், வழிகாட்டல்கள் பற்றியும் பேசுகின்ற 'பாலியலும் பருவ வயதும்' எனும் இந்நூல் வெளிவருவது மன மகிழ்ச்சியைத் தருகின்றது. ஆன்மீக நோக்கும், நடைமுறைப் பார்வையும் இணைந்ததாக இந்நூல் அமைந்துள்ளமை இதன் சிறப்பம்சமாகும்.

இளைஞர், யுவதிகள் இருபாலாரும் இப்பருவத்தில் எதிர்நோக்கும் சிக்கலான பிரச்சினைகளைத் துல்லியமாக இனங்கண்டு அவற்றுக்கான காத்திரமானதும், நடைமுறைச்சாத்தியமானதுமான தீர்வுகளையும் வழிகாட்டல்களையும் வழங்குவதில் இந்நூலின் ஆசிரியர் பெரிதும் வெற்றி கண்டுள்ளார். இளைஞரை வழிப்படுத்துவதில் (Counselling) ஈடுபடுவோர்க்கு இது ஒரு சிறந்த வழிகாட்டியாக அமையும் என்பது எனது கருத்தாகும்.

இது ஒரு மொழிபெயர்ப்பு நூல்; பாரசீக மொழியிலிருந்து பெயர்க்கப்பட்டிருக்கின்றது. ஆனால், இதுவொரு மொழிபெயர்ப்பு என்று சொல்ல முடியாத அளவுக்கு இனிய தமிழில், எளிய நடையில் மொழியாக்கம் செய்யப்பட்டிருக்கின்றது. எனவே, மூல நூலாசிரியரை மட்டுமன்றி மொழிபெயர்ப்பாளரையும் நாம் பாராட்ட வேண்டும்.

இத்தகைய ஆக்கபூர்வமான பணிகளே இன்று சமூகத்திற்குத் தேவைப்படுகின்றன. சர்ச்சைக்குரிய சில்லறை விவகாரங்களை அலசுவதைத் தவிர்த்து பயனுள்ள பணிகளில் ஈடுபட எல்லாம் வல்ல அல்லாஹுத்தஆலா நம்மனைவருக்கும் நல்லருள் புரிவானாக.

ஆமீன்.

அஷ்ஷெய்க் A. C. அகார் முஹம்மத்
பிரதிப் பணிப்பாளர்
ஜாமிஆ நழீமிய்யா கலாபீடம்
பேருவளை

# சமர்ப்பணம்

- அல்-ஹாஜ் வை. மீராமுகைதீன் அவர்களின் தந்தை அவர்
- எல்லோர்க்கும் அவர் 'யாஸீன் ஹாஜியார்'
- கோ. ப. மீன்பிடிச் சங்கத் தலைவர் என
- வாழைச்சேனை ஜும்ஆப் பள்ளிவாயலின் நீண்டகால தர்மகர்த்தா என
- கோ.ப.ப.நோ.கூ. சங்கப் பணிப்பாளர் என

பல்வேறு பதவிகளில் - பல்வேறு வழிகளில் சமூகப் பணிபுரிந்து
எம்மை விட்டும் பிரிந்து இறையருள் நாடிச் சென்ற
**மர்ஹூம் அல்லாஹ் பிச்சை யாஸீன் பாவா ஹாஜியார்**

- ஹாஜி மீரா முகைதீனின் பாரியாரின் தந்தையாம்
- ஹிதாயத்துல்லாஹ் ஆலிம் எனும் நாமத்தில் அறியப்பட்டவராம்
- ஆசிரியப் பெருந்தகை
- நீதி வழங்கும் காழி

**மர்ஹூம் அல்ஹாஜ் முகைதீன் பிச்சை ஆலிம் அஹமது முஸ்தபா ஆலிம்**

ஆகியோர்க்கு.

மூல நூலின்

# முன்னுரை

இன்றைய இளம் சந்ததியினரே, நாளைய சமூகத்தின் முதுகெலும்புகளாகத் திகழக் கூடியவர்கள். ஆதலால், அவர்களது எதிர்கால விடயங்கள் திட்டமிட்ட அடிப்படையிலும், உயரிய லட்சியத்தை குறிக்கோள்படுத்திய வகையிலும் நிர்ணயிக்கப்படுவது அவசியமாகும். ஆயினும், இவ் அவசியத்தை உணரத் தலைப்படாத ஆழ்ந்த உறக்கத்திலே பெற்றோர் மூழ்கியிருப்பது கவலை தருவதாய் அமைந்துள்ளது.

இந்நிலை மாற்றியமைக்கப்பட்டு, இளம் சந்ததியினரின் பருவ வயது உணர்வுகள் தொடர்பில் ஆழமான அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுவதும், பிரச்சினைகள் இனங்காணப்பட்டு, தீர்வுகள் உடனுக்குடன் முன் வைக்கப்படுவதும் அவசியமாகும். இதன் மூலம், அலட்சியம், நெறி பிறழ்வு, புரியாத்தனம் போன்ற பல்வேறு இழுக்கு நிலைகளிலிருந்து இளைஞர்களை மீட்டெடுக்க முடியும்.

இங்கு முரணுண்மையான விடயம் ஒன்று சுட்டிக் காட்டப் படத்தக்கதாகும். அதாவது சமகால நவீன ஆராய்ச்சிகள், நிலம், சமுத்திரம், வானிலை, விலங்குகள், கட்டடங்கள் தொடர்பான பல்வேறு அவதானிப்புகளை மேற்கொண்டு அவை தொடர்பான கருத்தரங்குகளையோ மாநாடுகளையோ ஒழுங்கமைத்த உலகளாவிய ரீதியிலான அறிஞர்களையும், ஆய்வாளர்களையும் ஒன்று

திரட்டி. இவ்வாறான விடயங்களுக்கு அதிக முக்கியத்துவம் கொடுத்துக் கொண்டிருக்கும் அதேவேளை பெறுமதியும், முக்கியத்துவமும் மிக்கவர்களான இளைஞர்கள் தொடர்பான அவதானிப்புகளும், நிகழ்வுகளும், ஒப்பீட்டு அளவில் மிகக் குறைவானவையாகவே அமைந்திருக்கின்றன என்பது கசப்பான ஓர் உண்மையாகும். தற்கால நிகழ்வுகள் மீதான உட்பார்வையின்படி, சிலரது தனிப்பட்ட விருப்பு, வெறுப்புகளின் தாக்கங்களுக்கு உட்படுத்தப்பட்டதாகவே உலக விவகாரங்கள் அமையப் பெறக் கூடிய அசாதாரண நிலையினைக் கொண்டிருப்பதை உணர்ந்து கொள்ள முடியும். இந்நிலை மூலம் பாலியல் விவகாரங்களும் முக்கியமானவையாகும்.

இளைஞர்கள் தொடர்பான விடயங்களில் பாலியல் ரீதியான விடயங்கள் அதிக முக்கியத்துவம் மிக்கவனவாகத் திகழ்கின்றன. ஏனைய பல்வேறு பிரச்சினைகளினதும், நடைமுறைச் சிக்கல்களினதும் தோற்றக்களமாக இதுவே அமைகின்றது. இவ்விடயம், முறையான பயிற்றுவிப்புகளுக்கோ, அல்லது வரையறைக்குட்பட்ட வழிகாட்டல்களுக்கோ உட்படுத்தப்படாத விடத்து, கலாசார சமூகவியல் ரீதியான பல பிரச்சினைகளுக்கு காரணமாக அமையப் பெற்று விடுகின்றது.

எனவே, இவ்விடயங்கள் பற்றிய தொடரான ஆய்விலே ஈடுபட்ட நாம், பிரச்சினைகளை தெளிவாக எடுத்துரைத்து, அவற்றுக்கான தீர்வுகளையும் சுட்டிக்காட்டியுள்ளோம். இவ்விடயங்களின் அவசியப் பெறுமானத்தையும், பிரயோகச் சாத்தியப் பாட்டையும் நாம் தெளிவாக நிரூபித்துள்ளோம். பெற்றோர்களும், இளைஞர்களும், இவ்வாறான பிரச்சினைகள் தொடர்பில் மிகுந்த இறையச்ச ஈடுபாட்டுடன் உழைக்க முன்வரும் போது இந்நூல் மிகச் சிறந்த வழிகாட்டியாகவும், வாழ்வின் பரிசுத்த நிலைக்கு உறுதியான உறுதுணையாகவம் அமையும் என்பது தெளிவு.

இந்நூலில் பாலியல் சீர்கேடும், அதற்கான தீர்வும் எனும் தலைப்பில், நடைமுறைசார்ந்த பாலியல் பிரச்சினைகளினது ஆழ அகலங்களை விளக்கி அவற்றின் முரண்பாட்டு நிலைகளின் யதார்த்தத்தையும் அறிவியல் கண்ணோட்டத்துடன் விளக்கியுள்ளோம். இந்நூலை வாசிக்கும் ஒவ்வொரு இளைஞரும் பாலியல் ரீதியான சீர்கேட்டு நிலைகளிலிருந்து தன்னையும், தன் திறமையையும் விடுவித்

துக் கொள்வதற்கான முனைப்பில் வெற்றி காண்பதற்கான சாத்தியப் பாட்டை அடைந்துகொள்ள முடியும்.

இதில் இடம் பெற்றுள்ள ஆய்வுகள் அனைத்தும் இளம் சந்ததி (நஸ்லே ஜவான்) எனும் பத்திரிகையில் தொடர் கட்டுரையாக பிரசுரமானபோது, வாசகர்களின் அமோக வரவேற்பு கிடைத்தது. அக் காலப்பகுதியில் பத்திரிகைக் காரியாலத்திற்கு அனுப்பப்பட்ட மடல்கள், வேண்டுகோள்களின் நிமித்தமே இதனை நூல் வடிவிலாக்குவதற்கான முயற்சியை மேற்கொண்டு தற்போது வெற்றியும் பெற்றுள்ளேன். அல்ஹம்துலில்லாஹ்.

எல்லாம் வல்ல அல்லாஹ் எமது இளைஞர்களைப் பாதுகாத்து, பாலியல் சீர்கேடுகளிலிருந்து தனிமைப்படுத்தப்பட்ட தூய வாழ்க்கை நெறியைக் கடைப்பிடிப்பதன் மீதான உள்ளார்வத்தை அவர்களுக்கு முழுமையாக வழங்க வேண்டுமென பிரார்த்திக்கின்றோம்.

**அஸ்-செய்க் நாஸிர் மகாரிம் ஷீராஸி**
கும் நகர்
ஈரான் இஸ்லாமிய குடியரசு

பகுதி 1

# திருமணப் பிரச்சினை

இளைஞர்கள் எதிர்நோக்கும் பாலியல் ரீதியான பல்வேறு பிரச்சினைகளுள் திருமணம் தொடர்பான பிரச்சினை பிரதானமானதாகும். அண்மைக் காலமாக இளைஞர்கள் திருமணம் செய்து கொள்வது கணிசமான அளவு குறைந்துள்ளதாக புள்ளி விபரங்கள் தெரிவிக்கின்றன. குறிப்பாக நாகரீகம் மலிந்துள்ள நகர்ப் புறங்களில் திருமணத்திற்கான வயதெல்லை அதிகரித்துக் காணப்படுகின்றது. இப்பிரதேசங்களில், திருமணத்திற்கென நிர்ணயிக்கப்படுகின்ற பொதுவான வயதெல்லையைத் தாண்டிய பின்பே இளைஞர்கள் திருமணம் செய்து கொள்கின்றனர். இவ்வாறான காலம் தாழ்த்தப்பட்ட திருமண நிகழ்வுகளுக்கு கீழ்க்காணும் நான்கு அம்சங்களை பிரதானமான காரணங்களாக அடையாளப் படுத்தலாம்.

1. நீண்ட கால கற்கை நெறிகள்.
2. தகாத உறவுகளுக்கான வாய்ப்புகள்.
3. திருமண வாழ்வினது அவசியம் உணரப்படாமையும், அதிகரித்த திருமணச் செலவும்.
4. இளைஞர், யுவதிகளிடையே பரஸ்பர புரிந்துணர்வின்மையும், நம்பிக்கையற்ற தன்மையும்.

இவற்றில் மேலே உள்ள இரு விடயங்களும் மிக முக்கியத்துவம் வாய்ந்து காணப்படுவதால் அவை நன்கு ஆய்வுக்குட்படுத்தப் படுகின்றன.

## 1. நீண்ட கால கற்கை நெறிகள்

இளைஞர்கள் தமது சிறு பராயத்திலிருந்து ஆரம்பிக்கின்ற கல்வியை பல வருடங்கள் கடந்த பின்னும் முடிவுக்குக் கொண்டு வரமுடியாமல், தொடர்ந்தும் அதனை முன்கொண்டு செல்ல வேண்டி நிர்ப்பந்திக்கப்படுகின்றனர். பாடசாலை, பல்கலைக்கழகம் என்பவை மட்டுமன்றி அவற்றுக்கு அப்பாலும் பட்டப்பின் படிப்புகள் அல்லது விசேட கற்கை நெறிகளில் ஈடுபட வேண்டிய அவசியத் தேவைக்குள் ஆட்படுகின்ற போது தமது திருமணத்தை காலம் தாழ்த்தும் நிலை இளைஞர்களுக்கு ஏற்படுகின்றது. இதன் விளைவாக தமது இளமைப் பருவம் கடந்து சென்ற பின்பே திருமணத்திற்கான சந்தர்ப்பத்தைப் பெற வேண்டிய நிலை அவர்களுக்கு ஏற்படுகின்றது.

அதேவேளை தமது கல்வியை முடித்த பின்னும், அல்லது எவ்வித கற்கை நெறிகளிலும் ஈடுபடாத நிலையிலும் திருமணம் செய்யாது வாழும் இளைஞர்களும் இருக்கவே செய்கின்றார்கள் என்பதையும் மறுப்பதற்கில்லை.

இதற்கமைய நீண்டகால வரையறை கொண்ட பட்டப்படிப்புகள் திருமண வாழ்வுக்கு பெரும் இடையூறாக அமைவதோடு முக்கிய காரணமாகவும் அமைந்து விடுகின்றது.

இன்றைய சூழலில் ஆரம்ப அடிப்படைக் கல்வியுடன் துறைசார் கல்வியையும் நிறைவு செய்கின்ற போது 18 வருடங்களையும், தொடர்ந்து பட்டப்படிப்புகளை நிறைவு செய்கின்ற போது 25 வருடங்களையும் கடந்து விட வேண்டிய நிலை இளைஞர்களுக்கு ஏற்படுகின்றது. யதார்த்த ரீதியாக நோக்குமிடத்து 25 வயதென்பது ஒருவனுடைய இளமைப் பருவத்தினது இறுதிக் கட்டப் பகுதியாகவே கொள்ளப்பட வேண்டியதாகும். எனவே இவ்வயது, பாலியல் ரீதியான பிரச்சினைகளிலிருந்து விடுபடுவதற்கான இறுதிக் காலப் பகுதியாக அமைவதனால் இச்சந்தர்ப்பத்திலுள்ள பயன்பாட்டுத் தன்மைகளை தம் வாழ்வில் பிரயோகித்து வெற்றி காண முயல்வது இளைஞர்களுக்கு அவசியமாகும். அதேவேளை தொடரும் கல்வி நிலைகளில்

பட்டப்பின்படிப்பு மற்றும் முதுமாணிப்பட்டம் என்பனவும் அறிமுகப்படுத்தப்பட்டுள்ளமையால். இவற்றையும் பூர்த்தி செய்ய முனைகின்ற போது, சுமார் 35 வயதைத் தாண்டிவிடக் கூட நிலை இளைஞர்களுக்கு ஏற்படுகின்றது. இது மிக அபாயகரமான நிலையாகும்.

இத்தகைய பட்டப்படிப்புகள் அதிகரித்த கால எல்லையைக் கொண்டிருப்பதனால் அவற்றை முற்று முழுதாக நிராகரித்து விடவும் முடியாது. அவற்றின் தேவை உணரப்படும் நேரங்களில் அவற்றில் ஈடுபடுவதன் அவசியமும் வலுவடையும் என்பதில் ஐயமில்லை.

அதே வேளை பட்டப்படிப்புகளையோ, விசேட கற்கை நெறிகளையோ தொடர விரும்பும் இளைஞர்கள் திருமணம் செய்து கொண்ட நிலையிலேயே அவற்றை தொடர்வது சாத்தியமேயென சிலர் வாதிட முன்வரலாம். மேலோட்டமான பார்வையின் பிரகாரம் இது சாத்தியமேயெனினும், மணவாழ்வின் பின்னுள்ள குடும்ப வாழ்வு, அதன் நடைமுறைப் பரிமாணம் என்பவற்றுடனான ஆழ்ந்த அறிவுடன் நோக்குமிடத்து இது சாத்தியமற்றதென்ற அல்லது முழு வெற்றியின் பாற்பட்ட பயன்பாட்டை விட்டும் தனிமைப்படுத்தப்பட்டதென்ற தீர்மானத்திற்கு நாம் வரமுடியும்.

ஏனெனில், குடும்ப வாழ்வு என்பது,' குடும்பத் தலைவன் என்ற அடிப்படையில் கணவன் மீதும் குடும்பத் தலைவி என்ற அடிப்படையில் மனைவி மீதும் வியாபகமான பாரிய சுமைகளை சுமத்துகின்றது. சமுதாயக் கட்டமைப்பு ரீதியாகவும், அன்றாட நடவடிக்கைகளுக் கான பொருளாதாரத் தேவை ரீதியாகவும் பல்வேறு பொறுப்பு களினதுஅழுத்த நிலையை சகித்துக் கொள்ள வேண்டிய நிர்ப்பந்த நிலையை திருமணமானதும் இளைஞர்களுக்குத் தோற்றுவிக் கின்றது. இவ் அழுத்த நிலைக்கு ஆட்படுகின்றபோது, தமது மேற் படிப்புகளையோ விசேட கற்கைகளையோ முழு அவதானத்துடனும், ஈடுபாட்டுடனும் கற்றுக் கொள்வதென்பது, இயல்பு ரீதியாக எந்த இளைஞனுக்கும் சாத்தியமற்றதாகி விடுகின்றது.

எனவே, ஒரு புறம் கல்வி கற்றுக் கொண்டிருக்கும் இளை ஞர்கள், மறுபுறம் உழைக்கும் இயந்திரமாகவோ குடும்ப விவகா ரங்கள் பற்றி சிந்தித்துணரக்கூடியவர்களாகவோ இருப்பது, இரு பணிகளிலுமே திருப்தியற்ற செயற்பாங்குக்கு வழிவகுப்பதாய்

அமைந்து விடும். அதே வேளை தமது அனைத்து கல்விகளும் முடியும் வரை திருமணத்தை ஒத்திப் போட்டு இளமைப் பருவத்தை வீணாக்குவது அல்லது பாலியல் பிரச்சினைகளுக்கு களம் அமைப்பது செயல் நிலையில் பிரமச்சாரியான வாழ்வுக்கு ஆரோக்கியமானதன்று. எனவே இது மிகப் பிணக்கு மிக்கதான ஓர் அம்சமாக அமைகின்றது.

ஆயினும், இதற்கு மிக இலகுவான தீர்வொன்றை நாம் முன்வைக்கலாம். தேவையற்ற மரபு ரீதியான கலாசாரப் பண்பாட்டு நிகழ்வுகளை ஒதுக்கித் தள்ளி விட்டு, சுதந்திரமாக சிந்திக்குமிடத்து இத்தீர்வை நாம் பெற்றுக் கொள்ள முடியும். அதாவது, இளைஞர்கள் படித்துக் கொண்டிருக்கும் நிலையில் திருமணத்திற்கான ஆரம்ப வயதை எட்டியதும், பெற்றோர் நண்பர்களுடைய ஆலோசனையின் பேரில், பொருத்தமான பெண்ணை தெரிவு செய்து, சட்டபூர்வமான திருமணத்தை செய்து கொள்ளலாம். வலீமா போன்ற வைபவ ரீதியான அல்லது சம்பிரதாய பூர்வமான திருமணச் சடங்குகளை ஒத்திப் போட்டு விடலாம். இதன் பின் குறித்த இளைஞனும், அவனது சட்டபூர்வ மனைவியும் தங்களுக்குள் உரையாடிக் கொண்டும், பரஸ்பர புரிந்துணர்வையும், அன்புப் பிணைப்பையும் வலுப்படுத்திக் கொண்டும் காலத்தை நகர்த்திக் கொண்டே தமது படிப்பையும் தொடர முடியும். சாத்தியப்படக் கூடிய நேரத்தில் **மண விருந்தாகிய வலீமாவையும் ஏற்பாடு செய்து வழங்கலாம்.** பின்னர், இருவரது படிப்பும் முழுமை பெற்ற பிறகு சம்பிரதாயபூர்வமான திருமணத்தை செய்து கொண்டு, இருவரும் தம்பதிகளாக தாம்பத்திய உறவில் முழுமையாக இணைந்து வாழலாம்.

இத்திருமண முறையானது. இளைஞர்கள் தமது படிப்பை சிறப்பாகத் தொடர்வதற்கு வழிவகுப்பதோடு, அதிகரித்த திருமணச் செலவினங்கள், குடும்ப வாழ்வின் அச்ச நிலை முதலானவற்றிலிருந்து அவர்களை விடுவிக்கின்றது. அத்தோடு, பாலியல் ரீதியான சீர்கேடுகளிலிருந்து இளைஞர்களைப் பாதுகாத்து, கணவன், மனைவிக்கிடையிலான பரஸ்பர புரிந்துணர்வு மிக்க கூட்டு வாழ்க்கைக்கு களம் அமைப்பதாகவும் செயற்பட முடியும். இக்காலப் பகுதியில் இருவரதும் உரையாடலுடனான தொடர்புகள், அவர்களது உள்ளங்களில் சந்தோஷ உணர்வையும், வாழ்க்கையின் எதிர்பார்ப்பையும் அதிகரிக்கச் செய்து, எதிர்காலத்தை மையப்படுத்திய முன்னேற்ற

முயற்சிகளுக்கு வலுவூட்டத்தக்க சிறந்த உறுதுணையாகவும் அமையும் என்பது உறுதி.

இம்முறையை விடுத்து, படிப்பு முடியும் வரை காத்திருந்து, அதன் பிறகு திருமணம் செய்து கொள்வதான முறையை இளைஞர்கள் தெரிவு செய்கின்ற போது, அது அவர்களது வாழ்வின் மீதான திருப்தியற்ற தன்மைக்கும் விரக்தி நிலைக்கும் வழி வகுப்பதாய் அமைந்து விடுகின்றது. ஏனெனில் இத் தெரிவின் மூலமாக, முதுமைப் பருவத்தின் ஆரம்ப காலப் பகுதியான 35 அல்லது 40 வயதிலேயே திருமணம் செய்து கொள்ள வேண்டி ஏற்படுவதால் குடும்ப வாழ்வினது மகிழ்வையும், தாம்பத்திய உறவினது இன்பத்தையும் பூரணமாக அனுபவித்துக் கொள்ள முடியாத நிலைக்கு அவர்கள் தள்ளப்படுகின்றனர். இயற்கை வாழ்வுக்கும் அடிப்படையான மனநிறைவுற்ற வாழ்வுக்கும் முரணான ஒரு வாழ்க்கையையே அவர்கள் எதிர்நோக்க வேண்டி ஏற்படுகின்றது. எனவே, சமூகவியல் அடிப்படையிலும், உளவியல் நோக்கிலும் எந்த ஓர் இளைஞனுக்கும் இது பொருத்தமான முறையாக அமைய முடியாது.

அதேபோன்று, படித்துக் கொண்டிருக்கும் காலப் பகுதியிலேயே அனைத்துத் திருமணச்சடங்குடன் திருமணம் செய்து கொள்வதன் மூலமாக குடும்பச் சுமையின் அழுத்தத்திற்குள் உள்வாங்கப்படும் இளைஞன். அதனைச் சமாளிக்க முடியாமல் திணற வேண்டிய நிலை ஏற்படுகின்றது. அத்துடன் குழந்தைகள் பிறந்து விட்டால் இச்சுமை இரட்டிப்பாகி படிப்பைத் தொடரவே முடியாத இக்கட்டான நிலை அவன் மீது வலிந்து திணிக்கப்பட்டு விடும். எனவே இளைஞர்களுக்கு ஏற்புடைய வகையில் இவை அமைய வேண்டியது அத்தியவசிய மானதொர்ருவிடயமாகும்.

## திருமணங்களின் குறைவு

தற்போதைய கால கட்டத்தில் இளைஞர்கள் திருமணம் செய்து கொள்வது கணிசமான அளவு குறைந்துள்ளதாக புள்ளிவிபரங்கள் தெரிவிக்கின்றன. திருமணத்தின் மீதான அச்சம், விருப்பமின்மை, நீண்ட கால பாடநெறிகளின் பின்னாலான சோர்வு நிலை, தகாத உறவுகள், அதிகரித்துள்ள குடும்பச் செலவுகள் முதலானவையே இந் நிலைக்குக் காரணம் எனக் குறிப்பிடலாம். இதன் விளைவாக,

இயற்கைக்கு முரணான பிரம்மச்சரிய வாழ்வைத் தேர்வு செய்ய வேண்டிய இறுக்க நிலை இளைஞர்களுக்கு ஏற்படுவது தவிர்க்க முடியாததாக ஆகிவிடுகின்றது. இது சமூக வாழ்வுக்கான அச்சுறுத்தலை ஏற்படுத்தக் கூடிய அபாயகரமான ஒரு நிலையாகும்.

திருமணத்தின் மீதான இளைஞர்களின் ஆர்வம் குறைந்து கொண்டு செல்வதனால், சனத் தொகை வளர்ச்சி வீதம் கட்டுப்படுத்தப்படலாம் என்ற இயல்புக்கு மாற்றமாக உலகில் மக்களின் எண்ணிக்கை அதிகரித்துக் கொண்டே செல்கின்றது என்ற முரணுண்மை இங்கு கவனிக்கத்தக்கதாகும்.

தவிரவும், திருமணமாகாதுள்ளவர்களின் கவனிப்புகளும், அவர்களது சமூகப் பொறுப்புக்கள் மீதான அவதானிப்புக்களும் சமுதாயத்தில் மிக அரிதாகவே இருப்பதைக் காண முடிகின்றது. இந்நிலை, குறித்த இளைஞர்களின் செயற்பாடுகளிலும், உள்ளுணர்விலும் அலட்சிய நிலையைத் தோற்றுவிப்பதோடு, அவர்களது நடைமுறைகள், மார்க்க வரம்புகளை மீறிச் செல்லும் சாத்தியப்பாட்டுக்கும் வழிவகுத்து விடுகின்றது.

இதற்கமைய திருமணம் மனித வாழ்வுக்கான சிறந்த காப்பீடாக அமைகின்றது. ஏனெனில், குடும்பம் ஒரு சிறிய சமூகம் என்பதற்கமைய ஒரு சமூகத்துடனான இறுகிய தொடர்பிணைப்பை அது இளைஞனுக்கு வழங்குகின்றது. அவ் இணைப்பானது, வாழ்க்கைத் தீர்மானங்களை நிர்ணயிக்கும் போது, தனதும் ஏனையோரதும் இருப்பை நினைவில் கொண்டு, எவருக்கும் பாதிப்பு ஏற்படாதவாறும் எதிர்கால வாழ்வின் செழிப்பை இலக்காகக் கொண்டதுமான இயல்புக்க நிலையை கைக்கொள்ள வேண்டிய அவசியத்தையும், அழுத்தத்தையும் வழங்குகின்றது. இது உள்ளார்ந்த ரீதியில், இளைஞர்களின் சிந்தனைகளையும் செயல்நிலைகளையும் நெறிப்படுத்தும் அகஆளுமையைக் கொண்டிருப்பதனால், திருமணமானது மனித வாழ்வுக்கான காப்பீடாகும் என்பது பொருத்தமானதாகும். திருமணம், இளைஞர்களின் வளர்ச்சிக்கும், முன்னேற்றத்திற்குமான ஏணிப் பாலமாகவும் அமைந்துள்ளது. ஏனெனில், தனித்திருக்கும் ஒரு இளைஞன், குடும்பப் பொறுப்புணர்ச்சி பற்றிய சிந்தனையற்றவனாகவும், தனது சக்திகளையும், ஆளுமையையும், அதிகம் பிரயோகிக்க வேண்டிய அவசியத்திற்குட்படாதவனாகவும் இருப்பதனால்,

அவனது சிந்தனைகள் குறுகிய வட்டத்துக்குள்ளேயே அடங்கிப் போய் விடுவதோடு, அவனது வாழ்க்கையும் இலக்கற்றதாக, அல்லது இலக்கை நோக்கிய நகர்வின் அவசியத்தை உணரத் தலைப்படாததாக அமைந்து விடுகின்றது. மேலும், தன் வாழ்க்கைத் தேவைகளை நிவர்த்தி செய்வதற்கான முனைப்பில் தன் அதிகபட்ச உழைப்பை மேற்கோள்ள வேண்டிய தேவை ஏற்படாது விடுவதனால் வாழ்க்கையில் தேக்க நிலையையும், சோம்பலையும் ஏற்படுத்தி விடுகின்றது. திருமணம் இக்குறைபாடுகள் அனைத்துக்குமான நிவாரணியாக அமைகின்றது. இதன்படி திருமணத்தின் மூலமாக, இளைஞர்கள் தமது செயற்திறனை வளர்த்துக் கொள்வதற்கான அடித்தளம் இடப்படுவதால், அது, அவர்களது வாழ்க்கையின் மிக முக்கிய முன்னேற்ற முயற்சியாகவும் அமைகின்றது.

அதுமட்டுமல்லாமல், திருமணத்திற்கு முன்னர் இலட்சியமற்ற செயற்பாங்குடன் தமது வாழ்வை அமைத்து, வீணான பொழுது போக்குகளிலும், விளையாட்டுக்களிலும் காலங்கடத்தும் இளைஞர்கள், மணவாழ்வில் இணைந்த பின்னர் பொறுப்புணர்ச்சி வாய்க்கப் பெற்றவர்களாக, வாழ்வில் சிறந்த ஓர் இலக்கை நிர்ணயித்துக் கொள்வதையும், திறமையையும் ஆற்றலையும் வளர்த்துக் கொண்டும் இலட்சிய புருஷர்களாக தம் நடைமுறைகளை நெறிப்படுத்திக் கொள்வதையும் அவதானிக்க முடிகின்றது.

அதேவேளை, தொழில் முயற்சிகளில் ஈடுபட வாய்ப்பு வசதியற்ற, அல்லது திறனற்ற இளைஞர்கள், தமது மனைவியின் உழைப்பில் வாழ்க்கை நடத்த முனையும் நிகழ்வுகளும் ஆங்காங்கே இடம் பெறவே செய்கின்றன. இது அவ்விளைஞனுக்கு யதார்த்த ரீதியாக பாரிய இழுக்காக அமைகின்றது. இவ்வாறான இளைஞர்கள் குறைந்த பட்சம், தாம் வாழும் மண்ணில் சிறிய பயிர்ச் செய்கை போன்ற சிறுவகைத்தொழில் முயற்சிகளையேனும் மேற்கொண்டு சுய கௌரவத்தோடு வாழ முனைவது இன்றியமையாததாகும்.

திருமணம், ஒரு மனிதனை பூரண மனிதனாக பரிணாமம் பெறச் செய்கின்றது. ஏனெனில், மணவாழ்வில் இணைந்து, ஒரு பெண்ணுக்கு கணவனாகவும், அதன் பின் பிள்ளைகளுக்கு தந்தை யாகவும் குடும்பஸ்தானங்களைப் பெறும் இளைஞன், தனது மனைவி -மக்களுடன் அன்பு, இரக்கம், தியாக சிந்தை, பொதுநலன் முதலான

பண்புகளையும், குடும்ப விவகாரங்களைத் தலைமைத்துவம் செய்யும் போது வாக்குறுதி, வீரம், மன்னிப்பு, உண்மை, தூர நோக்கு முதலான பண்புகளையும் கைக்கொள்ள வேண்டிய அவசியத்திற்கு உள்ளாக்கப்படுகின்றான். இவ்வாறான பண்புகள், மனிதனுக்குள் அமிழ்ந்து கிடக்கும் முழுமைத்துவத்தை முகிழ்ந்தெடுத்து வெளிக்கொணர்ந்து தருவதால் இவற்றின் மூலம் மனிதன் பூரண மனிதனாக வியாபகம் பெற முடிகின்றது.

திருமணத்தின் பின்னர் சமூக ரீதியாகவும், குடும்ப ரீதியாகவும் பல்வேறு பிரச்சினைகளுக்கு முகங்கொடுக்க வேண்டிய நிலை இளைஞனுக்கு ஏற்படுகின்றது. இப்பிரச்சினைகளை எதிர்கொண்டு அவற்றுக்கு உடனுக்குடன் தீர்வுகண்டு, வாழ்க்கையை தொடரியக்கத்திற்கு உட்படுத்துவதனூடாக சிறந்த அனுபவம் கிடைக்கின்றது. இவ் அனுபவம் அவ் விளைஞனை சகல வகையிலும் பூரணத்துவம் மிக்கவனாக மாற்றமுறச் செய்கின்றது.

இதற்கமைய திருமணம் ஒவ்வொரு இளைஞனுக்கும் இன்றியமையாத ஒன்றாக அமைகின்றது. இவ் இன்றியமையாத் தன்மை உணரப்பட்டு செயற்படுத்தப்படும் போது சமூகம் உயர்நிலையை அடைய முடியும். மாறாக, திருமணத்தின் அவசியம் உணரப்படாதிருப்பது அல்லது சமூகத்தில் திருமணங்கள் குறைந்து கொண்டு செல்வது, பிரதான சமுதாயச் சீர்கேடாகவே இனங்காணப்பட முடியும் எனின், அது மிகைக் கூற்றன்று.

ஆயினும், இதற்கு எதிர்நிலையான வாதத்தின் தன்மையும் கவனத்திற் கொள்ளப்படத்தக்கதாகும். அதாவது, திருமணமானது பாரிய சுமைகளை இளைஞர்கள் மீது சுமத்துகின்றது. இயந்திரவியல் வாழ்வு எனக் கணிக்கப்படும் மணவாழ்வானது. கருத்து முரண்பாடு, அதிகப் பொருளாதாரத் தேவை, புரிந்துணர்வின்மை, தொடரான எதிர்பார்ப்புகள் முதலான பல்வேறு நெருக்கடியானதும், கஷ்டமானதுமான வாழ்வு நிலையை இளைஞனுக்கு ஏற்படுத்தி விடுகின்றது என்பதையும் மறுப்பதற்கில்லை. எனினும், இந்நெருக்கடியான வாழ்வின் சகல பாதிப்புகளிலிருந்தும், தன்னையும், தன்னைச் சார்ந்துள்ள குடும்பத்தையும் பாதுகாத்து, சீரான இயல்பினடிப்படையில் வாழ்க்கையை தொடர்வதே இளைஞனின் கடமையாகவும், இக்கடமையிலேயே அவனது சிருஷ்டிப்பின் பூர்வீக நோக்கம் அமுல்படுத்தப்

படுவதற்கான சாத்தியப்பாடு வெளிப்படுவதாகவும் அமைந்துள்ளமை குறிப்பிடத்தக்கதாகும். எனவே இவ்வாறான சிக்கல் நிறைந்த சமூகப் பிரச்சினைகள் பற்றி மிக விரிவாகவும், ஆழமாவும் ஆராயப்பட்டு தீர்வு காணப்படாவிடின், இவற்றை முற்று முழுதாக சமுதாயத்திலிருந்து இல்லாதொழிக்க முடியாது.

திருமணத்தைப் பொறுத்த வரை, பல்வேறு வகையான சமூகத்துக்கு ஒவ்வாத நடைமுறைகளும் மரபுகளும் எம் சமுதாயத்தின் மத்தியிலே நிலைபெற்றிருப்பதை அவதானிக்க முடிகின்றது. இவை மனிதர்களது பிழையான அணுகுமுறைகள், தவறான நம்பிக்கைகள், முறையற்ற முடிவுகளின் வழியாக தோற்றம் பெற்றவையேயன்றி, சுயமாக உருவெடுத்தவையல்ல. எனவே, சமூக வாழ்வில் பிரதான படிமுறை வாழ்க்கை நெறியாகத் திகழும் திருமணத்தில் படர்ந்துள்ள தேவையற்ற கலாசாரங்களையும், மரபுகளையும் புறத்தொதுக்கி விட்டு யதார்த்த வரம்புகளுக்கு உட்பட்ட முறையில் திருமண நிகழ்வுகளை அமைத்துக் கொள்வது அவசியமாகும் அப்போது திருமணத்தின் வழியாக எதிர்பார்க்கப்படும் தூய இலக்கை முழுமையாக அடைந்து கொள்ள முடியும்.

## 2. தகாத உறவுகளுக்கான வாய்ப்புகள்

இன்றைய சமூகச் சூழலில், இயற்கை நிலைக்குப் புறம்பான பிரமச்சரிய வாழ்க்கை முறையைக் கைக்கொள்வதான நிகழ்வுகள் அதிகரித்து வருவது குறிப்பிடத்தக்கது. இதற்கு, இளைஞர்கள், தமது பாலியல் உணர்வுகளுக்கான வடிகாலாக தகாத முறையிலான உறவுத் தொடர்புகளைப் பேணி வருவது பிரதான காரணமாக அமைகின்றது.

சில இளைஞர்கள், பெண்களை சாதாரணமாக எண்ணத் தலைப்படுகின்றனர். அவர்களது கௌரவத்தினையும், தனித்துவத்தினையும் அச்சுறுத்தும்படியான நடைமுறைகளைக் கைக்கொள்வதோடு, பெண்கள் மிக இலகுவில் வசப்படக்கூடியவர்கள் என்ற தவறான புரிதலின் பிரகாரம் புறம்பான செயல்முறைகளில் ஈடுபடவும் முனைகின்றனர்.

இளைஞர்களது உள்ளங்களில் இவ்வாறான சிந்தனைப் போக்கு தோற்றம் பெற்றதில் நியாயங்களும் இல்லாமலில்லை.

ஏனெனில், நவீன நாகரீகங்களின் இழிவு நிலைக்கு அடிமையாகிப் போன பெண்கள் தமது அந்தஸ்தையும், அழகையும் மெரு கூட்டுவதாக நினைத்து அரைகுறை ஆடைகளுடன் அநாச்சார, அசூசையான பண்பாடுகளைப் பேணி வருகின்றனர். பெண்கள் வெளிக்காட்டும் இக்கவர்ச்சி இளைஞர்களின் உணர்வுகள் தூண் டப்படுவதற்கும், அதன் மூலம் அவர்கள் பாவச் செயல்களில் ஈடுபட்டு அவர்களது சுயம் கெடுவதற்கும் முக்கிய காரணமாக அமைந்து விடுகின்றது.

பெண்கள், தமது அழகை பகிரங்கப்படுத்துவது, உடலை விற்றுப் பிழைப்பது முதலான நாகரீக முதிர்ச்சிச் செயற்பாடுகள், அவர்களது அந்தஸ்தையும், அவர்களின் மீதான ஆவல் மிக்க எதிர்பார்ப்பு களையும் மழுங்கடிக்கச் செய்து, அவர்களை மிக சாதாரணமாக எடை போடுவதற்கும். அவர்களது நிலைகளை அலட்சியமாய் நோக் குவதற்கான சாத்தியத் தன்மைகளுக்குக் காரணமாக அமைந்து விடுகின்றன.

ஏனெனில், இலகுவில் கிடைக்கும் பொருட்கள் மீது ஆர்வமோ, முக்கியத்துவப்படுத்தலோ பெரும்பாலும் இருப்பதில்லை. அதே வேளை, மிகக் கஷ்டப்பட்டு பெறபட்ட ஒரு பொருள், சிறிதாக இருப் பினும், அது பெறுமதி மிக்கதாகவே தோற்றந் தருவதோடு, அதன் மீதான ஆர்வமும் அதிகரித்துக் காணப்படும். இது போன்றே, பெண்கள் இயல்பில் பெறுமதியும், அந்தஸ்தும் மிக்கவர்களாக விளங்கிய போதிலும் இலகுவில் பெறப்பட முடியுமான சிலருடைய பலவீனப் போக்குகளினால் அவர்களது தனித்துவமும், அந்தஸ்தும் மழுங்கடிக்கப்பட்டு விடுவதை அவதானிக்க முடிகின்றது.

பெண்களுடைய இவ்வாறான பலவீன நிலையை தமக்கு சாதகமாக பயன்படுத்திக் கொள்வதற்கான சாத்தியப்பாட்டைப் பெற்றுக் கொள்வதன் காரணமாக, இளைஞர்கள், திருமணம் செய்து கொள்வதன் உந்துதலை இழந்து விடுகின்றனர். வேறு சிலரோ, திருமணம் செய்து குடும்பப் பொறுப்புகளை சுமந்து சிரமத்திற்குள்ளாவதைப் பார்க்கிலும், உடல் இச்சையைத் தணித்துக் கொள்வதற்காக பல பெண்களுடன் உறவுகளை ஏற்படுத்திக் கொள்ளலாமே எனக் கருதுகின்றனர். சுமை மிக்கதான குடும்பப் பொறுப்புகளிலிருந்து தம்மை விடுவித்துக் கொள்வதற்கு இது சிறந்த

வழி எனவும் எண்ணத் தலைப்படுகின்றனர். இது குடும்ப வாழ்வின் மிகத் தவறான அணுகுமுறையாகும். தவிரவும், திருமணத்தினுடைய பெறுமானத்தையும், குடும்ப வாழ்வின் முக்கியத்துவம் மிக்க சிறப்பு நிலையையும் உணராது, பெண்களை வெறுமனே இச்சையைத் தீர்க்கும் ஒரு கருவியாக மட்டுமே கருத முனையும் மிக இழிவானதும், அபாயகரமானதுமான சிந்தனைப் போக்கு என்றே அடையாளப்படுத்த வேண்டியுள்ளது. இத்தகைய கருத்துருவாக்கம் குறித்த இளைஞர்களின் அறியாமைக்கும், முற்று முழுதான சமயப் பற்றற்ற நிலைக்கும் தக்க சான்றாக விளங்குகின்றது.

எனவே, திருமணக் குறைவுக்கு தகாத உறவுகளுக்கான வாய்ப்புகள் முக்கிய காரணமாக அமைந்துள்ளன. மேற்குலகின் கட்டுப்பாடற்ற வாழ்வு தகாத உறவுகளுக்கான வாய்ப்புகளுக்கு களம் அமைப்பதாக உள்ளது. மேலும், திருமணம், குடும்ப வாழ்வு என்பவற்றின் பெறுமானம் சரியாக உணரப்படாமையின் காரணமாக, காலம் தாழ்த்தியே திருமணங்கள் நிகழ்வதையும், மிகக் குறுகிய காலத்திற்குள்ளேயே விவாகரத்துகள் இடம் பெறுவதையும் அவதானிக்க முடிகின்றது.

இவ்வாறான உறவுக்கான வாய்ப்புகளை ஏற்படுத்திக் கொடுப்பதில் விபச்சார விடுதிகள் முதன்மை மிக்கவையாகத் திகழ்கின்றன. இவற்றின் பெருக்கமும், இவற்றிற்கான தேசிய ரீதியிலான அங்கீகாரமும், இளைஞர்களின் ஒழுக்க வாழ்வுக்கு பாரிய அச்சுறுத்தலாக அமைந்துள்ளன. இவை இளைஞர்களின் தனி வாழ்வையும், குடும்ப வாழ்வையும் கேள்விக்குறியாக்கி விடுவது மட்டுமன்றி தீராத பல பாரிய நோய்களையும் ஏற்படுத்தி விடுகின்றன.

எனினும், இவ்வாறான விடுதிகள் தொடர்பாக மாத்திரம் ஆய்வு செய்வதோ பிரஸ்தாபிப்பதோ, பிரச்சினைக்குத் தீர்வாக முடியாது. இவ்விடுதிகளில் விரும்பியோ, விரும்பாமலோ உருக்குலைந்து வாழும் பெண்கள் பற்றியும் ஆய்வு செய்யப்படுவது அவசியமாகும்.

இவ்வாறாக தமது பெண்மையை விற்றுப் பிழைக்கும் இம் மாதர்கள், சமகால நூற்றாண்டின் பாரிய அடிமைத்தனத்திற்கு வழிவகுத்தவர்கள் என சில ஆய்வாளர்களால் விரைவிலக்கணப் படுத்தப்பட்டிருப்பது இங்கு குறிப்பிடத்தக்கதாகும்.